செ.வெ.எண்: 01 நாள்: 01.08.2020

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களின் சமூகப்பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வகையில், பல்வேறு கடன் உதவிதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

மேற்படி கடன் திட்டங்களில் சில்லரை வியாபாரம் மற்றும் சிறு தொழில்கள், விவசாயம், போக்குவரத்து, கைவினைஞர் மற்றும் மரபுவழிச் சார்ந்த தொழில்கள், இளம் தொழிற் பட்டதாரிகள் சுய தொழில் ஆகிய தொழில்கள் தொடங்ககடன் வழங்கப்பட்டு வருகிறது. **பொது கால கடன்/தனிநபர் கடன் திட்டத்தின் கீழ்** அதிகபட்சம் ரூ.15.00 இலட்சம் ஆண்டிற்கு 6% முதல் 8% வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ்** அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் ஆண்டிற்கு 5% வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. சிறு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழு தொடங்கி 6 மாதங்கள் பூர்த்தி செய்த சுய உதவிக்குழு மகளிர்/ஆடவர் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்ச கடன் தொகையாக ரூ.1.00 இலட்சமும் குழு ஒன்றுக்கு அதிகபட்சமாக 15 இலட்சமும் பெண்களுக்கு 4% மற்றும் ஆடவருக்கு 5% ஆண்டு வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. மேற்படி சுய உதவிக்குழு மகளிர் திட்ட, திட்ட அலுவலரால் தரம் (GRADING) செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். கறவைமாடுகள் 2 வாங்ககடன் தொகை ரூ.60,000/- 6% ஆண்டு வட்டியில் வழங்கப்படுகிறது. மேற்படி டாப்செட்கோ கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இலவசமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் கூட்டுறவுகடன் சங்கங்கள் / வங்கிகள் ஆகிய இடங்களில் வழங்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட கடன் விண்ணப்பங்களை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் கூட்டுறவுகடன் சங்கங்கள் / வங்கிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படிகடன் பெற பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர் வகுப்பினராக இருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டொன்றுக்கு கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.300000/-க்கும் மிகாமல் இருக்க வேண்டும். வயதுவரம்பு 18 ஆண்டுகளுக்கு மேல் 60 வயதிற்குள் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

டாப்செட்கோ திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்கள் கடன் பெற்றுபயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ..ப**, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**